# செங்கல்பட்டு நகராட்சி

## <u>சாதாரணக் கூட்டம்</u>

### <u>2018ம் ஆண்டு ஜுலை மாதம் 31ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.</u>

----

**பொருள் – 1**

நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுன் – 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் – 2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன் – 2018 ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் – 3**

செங்கல்பட்டு நகராட்சி 6.09 ச.கி.மீ பரப்பளவுள்ள 33 வார்டுகள் கொண்ட முதல் நிலை நகராட்சியாகும். 2011ம் ஆண்டு முதல் மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி இந் நகராட்சியின் மக்கட் தொகை 64136 ஆகும். இந் நராட்சிக்கு நகராட்சிக்குச் சொந்தமான நீராதாரங்கள் மூலம் 4.50 லட்சம் லிட்டர் குடிநீர் தினசரி பெறப்பட்டு நபரொன்று நாளொன்றக்கு 70 (LPCD) லிட்டர் என்ற அளவில் தினசரி நான்கு நாட்களுக்கு ஒரு முறை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இந்த குடிநீர் விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குடிநீர் நகரின் அனைத்து பகுதிகளுக்கும் சீரான அழுத்தத்துடன் தினசரி விநியோகிக்க இயலாத நிலை உள்ளதால் ( DMA) District Metered Area வகைப்படி நகரை பல்வேறு குடிநீர் மண்டலங்களாக பிரித்து பல மண்டலங்களாக பிரித்து ஒவ்வொரு மண்டலத்துக்கும் (Zone) தனித்தனியாக குடிநீர் வழங்கத்தக்க வகையான ஏற்பாடுகளுடன் நகராட்சியால் தயாரிக்கப்பட்ட Ideal Zonation Map மற்றும் அதனை செயல்படுத்த தேவைப்படும்ட உட்கட்டமைப்புகள், மதிப்பீடு உள்ளிட்டவைகளை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை ( Detailed Project Report ) தயார் செய்ய தனியார் கலந்தாலோசகர் ( Consultant ) நியமனம் செய்யவும் இதற்கான செலவினத்தை Project Development Grand Fund (PDGF) அல்லது Project Preparatory Fund (PPF) நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

நகராட்சி பகுதிகளிலுள்ள பொது மக்கள் அனைவருக்கும் சீரான அழுத்தத்துடன் குடிநீர் விநியோகம் செய்யத்தக்க வகையிலான இப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக தனியார் கலந்தாய்வர் ( Consultancy ) நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 4**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பழவேலி தலைமை நீரேற்று நிலையங்களில் பழைய திட்டம் (ரேடியோமலை) மற்றும் புதிய திட்டம் பாசித் தெரு வடமலை மேல்நிலை தொட்டி மற்றும் தட்டான்மலை பழைய திட்டம் மற்றும் புதிய திட்டம் மேல்நிலை தொட்டிகளுக்கு நீர் ஏற்றும் மின் மோட்டார்கள் மற்றும் ஆற்றில் உள்ள 5 உறிஞ்சு கிணறுகளில் உள்ள மின் மோட்டார்கள், HDPE hose கேபிள்கள், பழுது ஏற்படும் காலங்களில் நீர்ஏற்றும் பணியில் தடை ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி பழுது ஏற்படும் காலங்களில் உடனுக்குடன் பழுதுகளை சரி செய்யும் மின் மோட்டார்கள், HDPE hose மற்றும் கேபிள்கள் மாற்றி பொது மக்களுக்கு குடிநீர் வழங்கவும், மேற்படி பணிகளில் குடிநீர் அத்தியவசியம் அவசர அவசியம் கருதி தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) குடிநீர் பணியின் அவசியம் கருதி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் – 5**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான தரை மட்ட தொட்டி மற்றும் மேல்நிலை தொட்டிகளில்

1) சார் ஆட்சியர் அலுவலக அருகில் உள்ள சம்ப்பில் உள்ள மின் மோட்டார் 20 எச்.பி. சப்மெர்சிபில் மோட்டார் ஸ்டார்டர், கேபிள் பைப்லைன் ஜி.ஐ. வெல்டிங் மற்றும் OHT கிளினிங் வேலை செய்யவும்.
2) பெரியமணியக்கார தெரு OHT பகுதியில் உள்ள மின் மோட்டார் 20 எச்.பி. 1 எண்ணிக்கை சப்மெர்சிபிள் மோட்டார், ஸ்டார்டர், கேபிள், பைப்லைன் வெல்டிங் பழுது நீக்கவும் மற்றும் OHT கிளினிங் செய்யவும்,

3) பாசித் தெரு OHT பகுதியில் உள்ள மின் மோட்டார் 20 எச்.பி. 1 எண்ணிக்கை சப்மெர்சிபிள் மோட்டார், ஸ்டார்டர், கேபிள், பைப்லைன் வெல்டிங் பழுது நீக்கவும் மற்றும் OHT கிளினிங் செய்யவும்,

4) வடமலை பள்ளி அருகில் (ரேடியோமலை) OHT பகுதியில் உள்ள மின் மோட்டார் 12.5 எச்.பி. 2 எண்ணிக்கை, 10 எச்.பி. 1 எண்ணிக்கை, 5 எண்ணிக்கை பூஸ்டர் நிலையத்தில் உள்ள 12.5 எச்.பி. சப்மெர்சிபிள் மோட்டார் ஸ்டார்டர், கேபிள், பைப்லைன் வெல்டிங் பழுது நீக்கவும் மற்றும் OHT கிளினிங் செய்யவும்,

மேற்படி இடங்களில் உள்ள மோட்டார்களில் பழுதுகள் ஏற்படும் காலங்களில் பொது மக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்கும் பொருட்டும், வரும் மழைக்காலம் எதிர் கொண்டு 2018–19 ஆண்டுகளில் குடிநீர் அவசர அவசியம் கருதியம் அத்தியாவசியமான உத்தேச மதிப்பீடு ரூ.4.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) குடிநீர் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நடவடிக்கைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

பொருள் – 6

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட 7 முதல் 33 வார்டுகள் வரை 27 வார்டுகளுக்கு தெரு விளக்குகளை பராமரிப்பு பணியினை திருவா. சன்ரைஸ் சோலார் சிஸ்டம், காஞ்சிபுரம் என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வருவதால், எனவே 3969 எண்ணிக்கை இனவாரியக தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியான 2017–18நிதியாண்டின் முடிவக்கு வருவதினால் 2018–19ம் ஆண்டில் முதல் ஆறு மாதங்களக்கு ( 7 முதல் 33 வரை) 27 வார்டுகளில் உள்ள தெரு விளக்குகளை பராமரிக்கும் பணியினை திருவா. சன்ரைஸ் சோலார் சிஸ்டம் என்ற நிறுவனத்தின் மூலமாகவே 2017–18 நிதியாண்டிற்கான தோராய செலவினம் ரூ.10.00 லட்சம் ஆகும். மேலும் ஏற்கனவே நகர மன்ற தீர்மானம் 69 நாள் 27.3.2017 ல் அனமதி வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விகிதத்தோடு பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்ட பணி நீட்டிப்புக்கும் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 7

செங்கல்பட்டு நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பொது மக்ளுக்கும், அரசு மருத்துவமனைக்கும் வழங்கும் பிறப்பு அறிக்கை படிவம்–1, படிவம்–4, மற்றும் 4எ தற்போது போதிய கையிறுப்பு இல்லாத காரணத்தால்

படிவம் –1 = 15,000 எண்ணிக்கை

படிவம் –4 = 2000 எண்ணிக்கை

படிவம் –4எ = 2000 எண்ணிக்கை

மேற்கண்ட பிரதி எண்ணிக்கைகளை காஞ்சிபுரம் கூட்டுறவு அச்சகத்தில் இருந்து அச்சிட்டு கொள்ளவும் இதற்காகும் தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

பொருள் – 8

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19ம் நிதியாண்டில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் பின் வரும் பணிகள் செய்ய 19.7.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 அன்னை அஞ்சுகம் நகரில் ஆழ்துளை கிணறு சிறுமின் விசைபம்பு அமைக்கும் பணி. | ரூ.3.10 | கே.ராஜகோபாலன் | 0.09 சதவீதம் குறைவு |
| | | | அப்பலோ எண்டர்பிரைசஸ் | 1.84 சதவீதம் அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வார்டு எண்.2ல் சமுதாய கூடத்திற்கு கூடுதல் கட்டிடம் அமைத்தல் | ரூ.5.00 | கே. வெங்கடேசலு | 0.10 சதவீதம் குறைவு |
| | | | இ. சந்திரன் | 2.28 சதவீதம் அதிகம் |
| 3 | வார்டு எண்.5 சின்னரத்தினம் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி. | ரூ.2.36 | சி. வீரபாண்டியன் | 0.01 சதவீதம் குறைவு |
| | | | கே. வெங்கடேசலு | 0.31 சதவீதம் அதிகம் |
| 4 | வார்டு எண்.8 தட்டான்மலை மற்றும் தூக்குமரக்குட்டை பகுதியில் ஆழ்துளை கிணறு சிறுமின் விசை பம்பு பணி | ரூ.3.39 | கே. வெங்கடேசலு | 0.36 சதவீதம் குறைவு |
| | | | இ. சந்திரன் | 1.67 சதவீதம் அதிகம் |
| 5 | வார்டு எண்.9 கே. கே. தெருவில் ஆழ்துளை கிணறு சிறுமின் விசை பம்பு குடிநீர் தொட்டி அமைக்கும் பணி. | ரூ.2.00 | கே.ராஜகோபாலன் | 0.82 சதவீதம் குறைவு |
| | | | அப்பலோ எண்டர்பிரைசஸ் | 2.58 சதவீதம் அதிகம் |
| 6 | வார்டு எண்.10 படிகட்டு தெருவில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி. | ரூ4.04 | கே. வெங்கடேசலு | 0.27 சதவீதம் குறைவு |
| | | | இ.சந்திரன் | 0.83 சதவீதம் அதிகம் |
| 7 | வார்டு எண்.13 அண்ணா சாலையில் ஆழ்துளை கிணறு, சிறுமின்விசை பம்பு குடிநீர் தொட்டி அமைக்கும் பணி | ரூ.1.98 | கே.ராஜகோபாலன் | 0.02 சதவீதம் குறைவு |
| | | | அப்பலோ எண்டர்பிரைசஸ் | 1.48 சதவீதம் அதிகம் |
| 8 | வார்டு எண்.13 மலைப்பூங்கா மக்கான் தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி | ரூ.2.88 | கே.ராஜகோபாலன் | 0.20 சதவீதம் குறைவு |
| | | | அப்பலோ எண்டர்பிரைசஸ் | 10.09 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு–

1) மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம். அதிக ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் டெபாசிட் தொகையினை திரும்ப வழங்கலாம்.
2) அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் – 9

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19ம் நிதியாண்டில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் பின் வரும் பணிகள் செய்ய 19.7.2018 அன்று ஒப்பந்துபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | ஒப்பந்துபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்.18 சின்னமணியக்கார தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி. | ரூ.9.00 | கே. வெங்கடேசலு | 0.18 சதவீதம் குறைவு |
| | | | இ. சந்திரன் | 0.38 சதவீதம் அதிகம் |
| 2 | வார்டு எண்.20 முருகேசனார் தெருவில் சிமெண்ட் சாலை மற்றும் வடிகால்வாய் அமைக்கும் பணி. | ரூ.2.56 | சி. வீரபாண்டியன் | 0.02 சதவீதம் குறைவு |
| | | | கே. வெங்கடேசலு | 0.54 சதவீதம் அதிகம் |
| 3 | வார்டு எண். 21 ராமபாளையம் சுடுகாடு தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் கல்வெட் அமைக்கும் பணி. | ரூ.4.04 | ராஜேஷ் | 0.12 சதவீதம் குறைவு |
| | | | கே. வெங்கடேசலு | 0.67 சதவீதம் அதிகம் |
| 4 | வார்டு எண்.22 குப்புசாமி தெருவில் குடிநிர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி. | ரூ.3.84 | கே.ராஜகோபாலன் | 0.07 சதவீதம் குறைவு |
| | | | அப்பலோ எண்டர்பிரைசஸ் | 3.99 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு–

1) மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்துபுள்ளியினை ஏற்கலாம். அதிக ஒப்பந்துபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் டெபாசிட் தொகையினை திரும்ப வழங்கலாம்.
2) அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் – 10

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19ம் நிதியாண்டில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் பின் வரும் பணிகள் செய்ய 19.7.2018 அன்று ஒப்பந்துபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.27 குண்டூர் பரமேஸ்வரபுரம் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி. | ரூ.4.01 | விமலாபாய் கன்ஸ்ரக்ஷன்ஸ் | 0.07 சதவீதம் குறைவு |
| | | | கங்காதரன் | 1.33 சதவீதம் அதிகம் |
| 2 | வார்டு எண். 29 சுமைதூக்கும் தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி. | ரூ.3.91 | சி. வீரபாண்டியன் | 0.01 சதவீதம் குறைவு |
| | | | கே. வெங்கடேசலு | 0.81 சதவீதம் அதிகம் |
| 3 | வார்டு எண்.31 தீயணைப்பு நிலையம் அருகில் உள்ள சாலையினை சிமெண்ட் சாலை அமைக்கும் பணி. | ரூ.3.12 | கே. வெங்கடேசலு | 0.18 சதவீதம் குறைவு |
| | | | இ. சந்திரன் | 0.38 சதவீதம் அதிகம் |
| 4 | வார்டு எண். 32 அழகேசன் நகர் பேருந்து நிழற்குடை பின்பும் தார் சாலை அமைக்கும் பணி. | ரூ.5.03 | ராஜேஷ் | 0.11 சதவீதம் குறைவு |
| | | | கே. வெங்கடேசலு | 0.48 சதவீதம் அதிகம் |
| 5 | வார்டு எண். 33 அண்ணா நகர் 8வது குறுக்கு தெருவில் முதல் மெயின்ரோடு வரை தார் சாலை அமைக்கும் பணி | ரூ.6.01 | கே. வெங்கடேசலு | 0.14 சதவீதம் குறைவு |
| | | | இ. சந்திரன் | 1.42 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு–

1) மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம். அதிக ஒப்பந்தபுள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் டெபாசிட் தொகையினை திரும்ப வழங்கலாம்.
2) அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் – 11

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண். 10, 17, 29 க்கான 2018–19ம் ஆண்டின் குத்தகை உரிமத்திற்கு 25.7.2018 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நடத்தப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அவை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**வ.எண்.1**

புதிய பேருந்து நிலையம் கடை எண். 10 ன் குத்தகை உரிமத்திற்காக வரப்பெற்ற ஒப்பந்தபுள்கிள் விவரம்.

1) திரு மகலக்கண்ணன், எண். 354 வ.ஊ.சி தெரு, வேண்பாக்கம் என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.17,500/.
2) திரு ஆகாஷ்ராஜ், 40, முத்தாயாள்பேட்டை, அய்யம்பேட்டை, என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.16,180/–
3) திரு சி.ஆர். ராஜா, க.எண்.77, ஜி.எஸ்.டி. சாலை, செங்கல்பட்டு என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.15,900/–
4) திருமதி சி. மஞ்சு, க.எண். 40, சி.என்.மகாதேவன் தெரு, செங்கல்பட்டு என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.25,050/–
5) திரு எஸ். செல்வம், க.எண். 69, சாஸ்திரி நகர், செங்கல்பட்டு என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.25,500/–

குறிப்பு– மேற்படி தொகையில் அதிகபட்ச தொகை ரூ.25,500/– ஐ திரு எஸ். செல்வம் என்பவர் ஒப்பந்தபுள்ளி கோரியுள்ளார்.

மேலும் மேற்படி க.எண். 10 க்கு கடைக்கு 31.5.2017ல் நடைபெற்ற ஒப்பந்தபுள்ளியில் திரு இ. கோதண்டராமன் என்பவர் அதிகபட்ச ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.35786/–ஐ கோரியிருந்தார். மேற்படி நபர் ஒப்பந்தபுள்ளி தொகை செலுத்த கடிதம் அனுப்பியதற்கு அவர் ஒப்பந்தபுள்ளி தொகை செலுத்த முன்வரவில்லை. மற்றும். 5.12.2017 ல் மறு எலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் திருமதி ஜி. ரூபாதேவி என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.38,600/– கோரியிருந்தார். மேற்படி தொகை செலத்த கடிதம் அனுப்பி இருந்தும் அன்னார் அத் தொகை செலுத்த முன்வரவில்லை. மேலும் மேற்படி கடைக்கு இந் நகராட்சியில் 2018–19ம் ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்கள் கண்காணிப்பு குழுவால் நிர்ணயிக்கப்பட்ட வாடகை மறு மதிப்பீடு ரூ.4,400/– ஓர் ஆண்டிற்கு (4400 X 12 = ரூ.52800) தொகை ரு.52800/– நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போது மூன்றாவது குத்தகை உரிம ஒப்பந்தப்புள்ளியின் போது வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளியில் மாத வாடகை தொகை ரூ.25500/– ஓர் ஆண்டிற்கு (25500 X 12 = 306000) உயர்ந்தபட்ச தொகை ரூ.3,06,000/– என்பதால் இதனால் நகராட்சிக்கு இழப்பீடு இல்லாமல் நகராட்சிக்கு வருவாய் அதிகமாக ஏற்படுவதால் மேற்படி உயர்ந்தபட்ச தொகை

ரூ.25500/—கோரிய திரு எஸ். செல்வம் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**வ.எண். 02**

புதிய பேருந்து நிலையம் க.எண். 17ன் குத்தகை உரிமத்திற்காக கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விவரம்.

1) திரு எஸ். பாஸ்கரன், க.எண். 49, டி.கே.எம். சாலை,
   செங்கல்பட்டு என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.11,000/—
2) திருமதி சி. மஞ்சு, க.எண். 40, சி.என்.மகாதேவன் தெரு
   செங்கல்பட்டு என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.15,050/—
3) திரு கண்ணன், க.எண்.29/123, நாவிதர் நகர்,
   ஆலப்பாக்கம் என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.18,330/—

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகையில் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.18,330/— ஐ திரு கண்ணன் என்பவர் கோரியுள்ளார்.

மேற்படி கடை எண். 17 க்கு 2018—19ம் ஆண்டு இந் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், அவர்களால் வாடகை மறு மதிப்பீடு செய்த தொகை ரூ.2800/— என்பதாகும். ஓர் ஆண்டிற்கு வாடகை (2800 X 12 = 33600) தொகை ரூ.33,600/— ஆகும். மேற்படி நபர் கோரிய உயர்ந்த பட்ச தொகை ரூ.18,330/— என்பதால் ஓர் ஆண்டிற்கு வாடகை தொகை (18330 X 12 = 219960) ரூ.2,19,960/— என்பதால் இதனால் இந் நகராட்சியின் வருவாய் உயர்வு பெறுவதால் மேற்படி உயர்ந்தபட்ச தொகை கோரிய திரு எம். கண்ணன் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**வ.எண். 03**

புதிய பேருந்து நிலையம் கடை எண். 29க்கான குத்தகை உரிமத்திற்கான கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விவரம்

1) திரு கே. கமலக்கண்ணன், எண். 354, வ.ஊ.சி தெரு
   வேண்பாக்கம் என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.8,000/—
2) திரு எம். கண்ணன், எண்.29/123 நாவிதர் நகர்,
   ஆலப்பாக்கம், என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.15,000/—
3) திரு வி. மனோகரன், க.எண். 28/53, பாரதியார் தெரு,
   செங்கல்பட்டு என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.21,000/—
4) திரு எம். சரவணன், எண்.2/518 காந்தி நகர், படப்பை

என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.15,600/–

5) திருமதி சி. மஞ்சு, க.எண்.40, சி.என்.மகாதேவன் தெரு, செங்கல்பட்டு என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.24,050/–

6) திருமதி ஆர். மீனாட்சி, க.எண்.40, முத்தையாள்பேட்டை அய்யம்பேட்டை என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.12,270/–

7) திரு சி.ஆர். ராஜா, க.எண்.77, ஜி.எஸ்.டி. சாலை, செங்கல்பட்டு என்பவரது ஒப்பந்தபுள்ளி தொகை = ரூ.15,900/–

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் உயர்ந்தபட்ச தொகை ரூ.24,050/–ஐ திருமதி சி. மஞ்ச என்பவர் கோரியுள்ளார்.

மேலும் மேற்படி க.எண். 29 க்கு 2018–19ம் ஆண்டு இந் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்களால் மறு மதிப்பீடு செய்த தொகை ரூ.5900/– என்பதால் ஓர் ஆண்டிற்கு வாடகை தொகை ( 5900 X 12 = 70800) ரூ.70,800/– ஆகும். மற்றும் மேற்படி நபர் கோரிய உயர்ந்தபட்ச தொகை ரூ.24050/–என்பதால் ஓர் ஆண்டிற்கு வாடகை தொகை (24050 X 12 = 288600) ரூ.2,88,600/– என்பதால் இதனால் இந் நகராட்சியின் வருவாய் உயர்வு பெறுவதால் மேற்படி உயர்ந்தபட்ச தொகை கோரிய திருமதி சி. மஞ்சு என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

புதிய பேருந்து நிலைய கடை எண். 10, 17, 29 க்கு வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி தொகையை ஏற்றுக் கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1621/2017/அ1)

**பொருள் – 12**

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19ம் ஆண்டிற்கு அலுவலக அன்றாடப் பணிக்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் தேவையான உபகரணங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மற்றும் கூட்டுறவு சங்க நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தபுள்ளி மூலம் வாங்கிக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவும் தொகை ரூ. 4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம். தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் – 13

இந் நகராட்சியில் குத்தகை ஏலம் சைக்கிள் வசூலிக்கும் பணிக்கு திரு எஸ். முனுசாமி என்பவர் டெபாசிட் தொகை செலுத்தி பணி முடிவு பெற்று விட்டதால் தற்போது டெபாசிட் தொகை திரும்ப வழங்குமாறு தமது கடிதத்தில் கோரியுள்ளார்.

1) தொகை ரூ.5000/–

மேலும் மேற்படி முடிக்கப்பட்டு விட்டதாக வருவாய் ஆய்வர் குறிப்பு வழங்கி டெபாசிட் தொகை திரும்ப வழங்கவும், மேற்படி பணியில் 2015–16ம் ஆண்டு தணிக்கை தடை ஏதுமில்லை என தணிக்கை எழுத்தர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி மனுதாரர் செலுத்திய டெபாசிட் தொகையை ரூ.5000/– திரும்ப வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்ற ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் – 14

செங்கல்பட்டு நகராட்சியின் நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு கணிணி சேவைக்கு மின்சாரம் தடையின்றி வழங்கவும், பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் வழங்கவும் யு,.பி.எஸ். கருவி தேவைப்படுவதால் அதற்கு தனி அலுவலர் அவர்களின் நகர மன்ற தீர்மான எண். 377 நாள் 22.3.2018 அன்று நிர்வாக அனுமதி பெற்று 27.3.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பொது பிரிவின் நகர் நல அலுவலர் அறைக்கு யு.பி.எஸ். கருவிகள் சப்ளை செய்து கணினிகளை இயக்கும் பணி. | ரூ.4.50 | GSOFT SYSTEM | 0.61 சதவீதம் குறைவு |
| | | | ஆனந்த் எண்டர்பிரைசஸ் | 0.42 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருவா ஜி. சாப்ட் சிஸ்டம், சென்னை ஒப்பந்தபுள்ளி ஏற்க அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்ததற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் – 15

இந் நகராட்சியில் பணிபுரியும் உள்புற மற்றும் வெளிபுற பணியாளர்களுக்கு வருகை பதிவேட்டை பயோ மெட்ரிக் முறையில் பதிவு செய்ய வேண்டும் என தெரிவித்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு மண்டலம், (இ) தாம்பரம் அவர்களின் கடித ந.க.எண். 3655/2015/பி1 நாள் 27.3.2018ன்படி பயோ மெட்ரிக் டிவைஸ் வைக்க பெறப்பட்ட எல்காட், சென்னை–600 035 ன் பட்டியல் எண். P1/C20/011/0003/62/2018-19/1127 நாள் 27.7.2018 ரூ.58903/–யை 100 சதவீதம் முன் பணமாக செலுத்த தெரிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு முன் பணமாக வழங்கி பயோ மெட்ரிக் டிவைஸ் பொறுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவினம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 1694/2018/இ1)

பொருள் – 16

செங்கல்பட்டு நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் பல்வேறு பதிவேடுகள், மற்றும் 1920 முதல் பிறப்பு இறப்பு பதிவேடுகள் பாதுகாப்பப்பட்டு வருகிறது. இவைகள் அனைத்தும் பொது மக்கள் சம்மந்தமான பதிவு கோப்பு ஆகும். எனவே தீ விபத்துகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள தீயணைக்கும் சாதனம் தற்பாதுகாப்பாக பயன்படுத்தி கொள்ள இதனை வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்ற நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 17

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவருக்கும் சீருடை வழங்குவது கடமையாகும். எனவே இவ்வாண்டு 2018–19ம் ஆண்டிற்கு துப்புரவு பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒட்டுனர்கள் அனைவருக்கும் சீருடை வாங்குவதற்கான செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்
2) அவசர அவசிய நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கான பின்னேற்ப்பு வழங்கலாம்.

**பொருள் – 18**

செங்கல்பட்டு நகராட்சி அனைத்து வார்டுகளிலும் சேகரமாகும் மக்கும் குப்பைகளை கொண்டு நகராட்சி உரகிடங்கில் உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப் பணியில் குப்பைகள் மீது தெளிப்பதற்காக இ.எம். சொலுஷன் எனப்படும் திரவம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனை திடநிலையில் உருவாக்குவதற்கு தவிடு, உமி, மற்றும் ஈ மருந்து , தயிர், வெல்லம் போன்றவை தேவைப்படுகிறது. இதனை வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ. 1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் – 19**

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதார பிரிவு நகர எல்லைக்குள் அனைத்து வார்டுகளிலும் கொசுப்புழு ஒழிக்கும் பணிகள் (டி.பி.சி) நடந்து வருகிறது. இந் நிலையில் விழிப்புணர்வு அறிவிப்புகள் மற்றும் கொசுப்புழு இல்லாத வீடுகளுக்கு பாராட்டி நோட்டீஸ் ஒட்டுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 2571/2017/ஜெ1 நாள் 13.6.2018 ம் தேதிய அறிவிப்பின்படி நோட்டீஸ் அச்சிடுவதற்கு தோராய செலவினம் ரூ.25,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் – 20**

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் பயன்படுத்தும் (சுத்தம் செய்தல்) உரக்கிடங்கு, பேரூந்து நிலையம் போன்றவற்றிலுள்ள ஈக்கள், கரப்பான்பூச்சிகள் மற்றும் எறும்புகள் போன்றவற்றை கட்டுப்படும் மருந்து Readymix தேவைப்படுவதால் 200 லிட்டர்

வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.6.00 இலட்சம் மற்றும் பொது சுகாதார வாகனங்களில் குப்பைகள் காற்றில் பறக்கா வண்ணம் தடுப்பதற்கு குப்பை அள்ளும் பெரிய மற்றும் சிறிய அனைத்து வாகனங்களுக்கும் நைலான் வலைகள் கீழ்கண்டவாறு வாங்க தோராய செலவினம் ரூ.1.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) Auto -1 10 X 5 = 2 nos
2) Tata Ace – 3 10 X 7 = 6 nos
3) Lorry – 1 12 X 8 = 2 nos
4) Tractor – 2 12 X 8 = 4 nos
5) 407 Lorry 15 X 10 = 2 nos

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் – 21**

செங்கல்பட்டு நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (2018–19) ல் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

| தொகுப்பு | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி ராமபாளையம் பகுதியில் 2 எம்டி கொள்ளளவு கொண்ட MCC (Micro Composting Centre) பசுமை உரகுடில் அமைக்கும் பணி. | ரூ.39.00 லட்சம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சி அண்ணா நகர் பகுதியில் Onsite Composting அமைக்கும் பணி. | ரூ.10.80 லட்சம் |
| 3 | செங்கல்பட்டு நகராட்சி அழகேசன் நகர் பகுதியில் Onsite Composting அமைக்கும் பணி. | ரூ.7.50 லட்சம் |
| 4 | செங்கல்பட்டு நகராட்சி உரகிடங்கிற்கு (Micro Composting Centre) தேவைப்படும் இயந்திரங்கள் பணி. | ரூ.23.00 லட்சம் |
| 5 | செங்கல்பட்டு நகராட்சிக்கு 20 எண்ணிக்கையிலான Battery Operated Vehicles வாங்கும் பணி. | ரூ.36.00 லட்சம் |
| 6 | செங்கல்பட்டு நகராட்சிக்க 3 எண்ணிக்கையில் LCV (TATA ACE) வாங்கும் பணி | ரூ.16.80 லட்சம் |
| 7 | செங்கல்பட்டு ஆடு அறுவடை கூடத்தில் Bio Digester அமைக்கும் பணி. | ரூ.15.00 லட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.148.10 லட்சம்** |

மேற்கண்ட பணிகளுக்கு உண்டான தொகை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நிதி பெற்ற பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு–

1) பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பொது சுகாதார பணிகளை தூய்மை இந்தியா திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 22

இந் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். (எம்.எஸ்) எண். 166 நாள் 23.11.2016ல் இந் நகராட்சிக்குட்பட்ட அரசு / நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள் சுத்தம் செய்ய வேண்டி தனியார் மூலம் பராமரித்தல் அதற்கான செலவினம் ஆட்கள் நியமனம், இப்பணிக்கான பொருட்கள் வழங்குதல் குறித்து மன்ற தீர்மானம் எண். 472 நாள் 27.5.2018ல் அனுமதி பெறப்பட்டதின் பேரில் 22.6.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்டுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்பு தொகை ரூ. | ஒரு துப்புரவு பணியாளர் ஒரு நாள் ஊதியம் (ம) கழிவறை சுத்தம் செய்ய பயன்படுத்தும் பொருளுடன் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Relyon Facility Service Pvt. ltd. | 25950/– | ரூ.453/– | 47 சதவீதம் குறைவு |
| 2 | A.T.R. Enterprises | 25950/– | –– | Invalid Tender |

மேற்படி இரண்டு ஒப்பந்தபுள்ளியில் வரிசை எண். 1ல் கண்டுள்ள Relyon Facility Service Pvt. ltd. என்பவரின் ஒப்பந்தம் மற்றும் டெக்னிக்கல் பிட்டிங் வரிசை எண். 2ல் உள்ள A.T.R. Enterprises நிறுவனத்தின் சொத்தின் மதிப்பீடு மற்றும் வரவு செலவு ஒரு ஆண்டுக்கு 50 இலட்சத்திற்கு காண்பிக்கப்பட வேண்டும். அதன் விவரம் ஒப்பந்தத்தில் போதுமான அளவு (50 இலட்சம் ) இல்லை. எனவே அன்னாரின் டெக்னிக்கல் பிட்டிங் நிராகரிக்கப்படுகிறார்.

எனவே வரிசை எண். 1 ல் உள்ள Relyon Facility Service Pvt. ltd. நிறுவனம் மட்டும் 2.7.2018ல் பினான்சியல் பிட் ஒப்பன் செய்யும் போது ஒன்று மட்டும் பிரிக்கப்பட்டது. மேலும் வரிசை எண். 2ல் உள்ள A.T.R. Enterprises நிறுவனத்தின் கவன் திறக்கப்படவில்லை. எனவே அனைத்திற்கும் தகுதியும் பெற்று ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டை விட

47 சதவீதம் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Relyon Facility Service Pvt. ltd. நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பொது சுகாதார பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து செலுத்த மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.3388/2017/எச்1)

பொருள் – 23

செங்கல்பட்டு நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் தலைகவசம் , கையுறை, முக கவசம், காலுறை, வழங்கவும், மற்றும் பயன்படும் பொருட்கள் கத்தி, கடபாறை, மண்வெட்டி, கரண்டி, ஒடு சவல், கூரை, ஊக்கு போன்ற அனைத்தையும் வாங்குவதற்கான தோராய செலவினம் ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் – 24

2017 கோடை கால குடிநீர் தட்டுப்பாட்டுக்காக 2017 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அனுமதியற்ற மின் மோட்டார்கள் 93 எண்ணிக்கையில் துண்டிக்கப்பட்டு ஏலம் விடுவதற்கு 27.4.2018ல் மன்ற தீர்மான அனுமதி பெற்று (நகர மன்ற தீர்மான எண். 420) 12.7.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு

<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>அரசாங்க மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td rowspan="2">செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மார்ச் மற்றும் ஏப்ரல் 2017 ல் அனுமதியற்ற 93 குடிநீர் மின் மோட்டார்கள் ஏலம் விடுதல்.</td><td rowspan="2">ரூ.1031/– (ஒரு எண்ணிக்கை)</td><td>திரு எம். தியாகராஜன்</td><td>ஒரு எண்ணிக்கை ரூ,1035/–</td></tr>
<tr><td>2</td><td>திரு எம். மோகன கிருஷ்ணன்,</td><td>ஒரு எண்ணிக்கை ரூ.1025/–</td></tr>
</table>

திரு எம். தியாகராஜன் அவர்கள் அதிகபட்ச ஒப்பந்தபுள்ளி தொகை பெறப்பட்டுள்ளது. அத் தொகை ஏற்றிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 25**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 160 கே.வி.எ ஜெனரேட்டர் பழுதின் காரணமாக இயங்காமல் உள்ளது. மேற்படி 160 கே.வி.ஏ. ஜெனரேட்டர் On/OFF Switch, Pannal Board, Control Boxes Unit, MCB, Automatic Starter timer unit, New Battery, wring of panel 6 sqm 3 core copper cable, 10 sqmm copper cable. Cable Terminal and guard, Terminal counter, Engine oil change, Filter changes, Disel Unit, Self motor charging, Indicator lamp, Oil service, General Service, Alternator control unit, Generator oil rings and belt, coolent oil, coolent water mixture ஆகிய பழுதினை சரி செய்ய 160 கே.வி.எ. ஜெனரேட்டர் இயக்கத்தில் வைக்க உத்தேசமாக ரூ.1.25 இலட்சம் ஆகும். வரும் மழைகாலத்தினை கருத்தில் கொண்டு உடன் பழுதினை சரி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

தனி அலுவலர்,
செங்கல்பட்டு நகராட்சி.